# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

**ஆணை எண்: 30/பேரூ/2023**

**நாள்: 05.06.2023**

திரு. அ. செவலூர் பாண்டியன்,
சேத்தூர்,
இராஜபாளையம் வட்டம்,
விருதுநகர் மாவட்டம் ... மனுதாரர்

செயல் அலுவலர்,
சேத்தூர் பேரூராட்சி,
விருதுநகர் மாவட்டம் .... எதிர்மனுதாரர்

விருதுநகர் மாவட்டம், சேத்தூர், எண் 8A சின்னஞ்சித்தேவர் தெரு என்ற முகவரியைச் சேர்ந்த திரு.அ.சேவலூர் பாண்டியன் என்பவரது 31.01.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 06.02.2023 அன்று பெறப்பட்டு எண் 30/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

விருதுநகர் மாவட்டம், சேத்தூர், எண் 8A சின்னஞ்சித்தேவர் தெரு, என்ற முகவரியைச் சேர்ந்த திரு. அ.சேவலூர் பாண்டியன் என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்.

**1) ஸ்ரீமாரியம்மன் நகரில் வடிகால் மற்றும் சாலை அமைத்தல்:-**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் மன்றம் சென்னை அவர்களின் ஆணை எண். 059/2016 நாள் 02.11.2018ல் மேட்டுப்பட்டி மாரியம்மன் நகர், ஸ்ரீஅம்மன் நகர் மற்றும் அருணா ரைஸ் மில் வளாகத்தில் கீழ்க்கண்ட வீட்டுமனை பிரிவுகள் அரசு அனுமதி இன்றி சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

அம்மன் நகர் சர்வே எண். 394/1(ஒரு ஏக்கர்)
மாரியம்மன் நகர் சர்வே எண். 386/1A, 387/2A1.395/1 (8 ஏக்கர்)
அருணா ரைஸ்மில் வளாகம் சர்வே எண்.400/2C.400/10( 2½ ஏக்கர்)

மேற்படி சர்வே நம்பர்களின் அடிப்படையில் கீழ்கண்ட விபரப்படி பொது பயன்பாட்டிற்கு காலி நிலம் பேரூராட்சிக்கு ஒப்படைக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1) | ஸ்ரீஅம்மன் நகர் | 10 செண்ட் நிலம் |
| 2) | மாரியம்மன் நகர் | 80 செண்ட் நிலம் |
| 3) | அருணா ரைஸ்மில் வளாகம் | 25 செண்ட் நிலம். |

ஆனால் யாரும் ஒரு செண்ட் நிலம் கூட பேரூராட்சிக்கு ஒப்படைக்கவில்லை. வீட்டுமனை பிரிவுகள் டவுன் பிளானிங் அலுவலகம் மதுரையில் எந்த அனுமதியும் பெறவில்லை என்று தெரிந்தும் பொது பயன்பாட்டிற்கு உரிய நிலம் பேரூராட்சிக்கு ஒப்படைக்கவில்லை என்று தெரிந்தும் சேத்தூர் பேரூராட்சியில் வீட்டுமனைகளில் கட்டிடம் கட்ட அனுமதிக்கப்பட்டு சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது. இது குறித்து தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற ஆணை எண்.59./2016 நாள் 2.11.2018–ல் பேரூராட்சிக்கு 10 சதவீதம் பொது பயன்பாட்டிற்கு நிலம் ஒதுக்கப்படாத வகையில் ரூ.1,33,43,932/– (ஒரு கோடியே முப்பத்தி மூன்று லட்சத்தி நாற்பத்தி மூவாயித்து தொள்ளாரயித்து முப்பத்தி இரண்டு மட்டும்) நிதி இழப்பீடு செய்யப்பட்டதை உரிய நடவடிக்கை எடுக்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தற்போதைய செயல் அலுவலருக்கு நேரில் தகவல் மற்றும் நடுவர் மன்ற உத்திரவு நகல் வழங்கப்பட்டது. ஆனால் செயல் அலுவலர் இந்த உண்மை எல்லாம் மறைத்து மேற்படி மாரியம்மன் நகரில் 2021–2022ம் ஆண்டு கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 123.45 லட்சத்தில் பழைய வார்டு எண். 2 மாரியம்மன் நகர் மெயின் தெரு மற்றும் குறுக்குதெருவில் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைக்க அனுமதி பெற்று டெண்டர் விடப்பட்டுள்ளது. இது விபரம் மேற்படி தெருவில் வைக்கப்பட்ட பெயர் பலகை மூலம்தான் தெரியவந்தது. டெண்டர் நோட்டீஸ் முறையாக விளம்பரம் செய்யப்படவில்லை. பேரூராட்சி அலுவலக நோட்டீஸ் போர்டில் கூட ஒட்டப்படவில்லை. எனவே அனுமதி இல்லாத மனைப்பிரிவில் வேலை செய்ய நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி வழங்கிய பொறியாளர் மீதும் அரசை ஏமாற்றி பணம் பெற்று வேலை உத்திரவு வழங்கிய செயல் அலுவலர் மீதும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டிக்கொள்கிறேன்.

## 2) கழிப்பிடம் பழுதுபார்த்தல் வேலைகள்:-

1) பேரூராட்சியில் பல இடங்களில் பொதுகழிப்பிடங்கள் கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வந்தது. நல்ல நிலையில் இருந்து வந்தது. அதிலும் சேத்தூர் மந்தைத் தெருவில் முன்னாள்

MLA கோபால்சாமி நிதியில் ரூ.5/– லட்சத்தில் கட்டப்பட்ட கழிவறையை 5 ஆண்டுகளுக்கு மேலாக உபயோகத்திற்கு பேரூராட்சி செயல் அலுவலர் கொண்டுவரவில்லை. தற்பொழுது ரூ.15/– லட்சம் செலவில் பராமரிப்பு செய்ய மதிப்பீடு தயாரித்து வேலை நடைபெற இருந்தது. இந்நிலையில் நன்றாக உள்ள கழிப்பிடத்தை ஏன் ரிப்பேர் செய்யவேண்டும் என்று கேட்டதற்கு அதற்கெல்லாம் பதில்சொல்லமுடியாது என்று கூறிவிட்டார். மேலும் கீழ்கண்ட இடங்களில் உள்ள கழிப்பிடங்களை அகற்றும் கட்டணக்கழிப்பிடமாக இயங்கி வந்தன.

| | | |
|---|---|---|
| 1. | பேருந்து நிலையத்தில் உள்ள கழிப்பிடங்கள் | ரூ.15/– லட்சம் |
| 2. | அரண்மனைத் தெருவில் உள்ள கழிப்பிடங்கள் | ரூ.10/– லட்சம் |
| 3. | சேத்தூர் மந்தைதெருவில் உள்ள மற்றொரு கழிப்பிடம் | ரூ.10/– லட்சம் |
| 4. | அருந்ததியர் தெருவில் உள்ள கழிப்பிடம். | ரூ.10/– லட்சம் |

2) ஆனால் மேற்கண்ட அனைத்து பொது கழிப்பிடங்களுக்கும் பராமரிப்பு செலவாக பல இலட்சங்கள் செலவு செய்துள்ளனர் இதன் உண்மை தன்மை அறிய பொதுப்பணித்துறை உயர் பொறியாளர்களைக் கொண்டு அளவீடு செய்தால் உண்மை வெளிவரும் பேரூராட்சி பொதுமக்கள் பணம் எவ்வளவு கொள்ளயடிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிய வரும்.

<u>3) அங்கீகாரம் இல்லாத வீட்டுமனைகளில் வீடுகட்ட அனுமதி வழங்கியது :-</u>

கீழ்க்கண்ட சர்வே எண்களில் 2 ½ ஏக்கர், 8 ஏக்கர், 1 ஏக்கர் நிலங்களில் வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

1) அருணா ரைஸ்மில் வளாகம் சர்வே எண் 400/2C. 400/10-ல் 14 வீடுகள்,14 கடைகள் கட்டப்பட்டுள்ளது. இவை அனைத்திற்கும் செயல் அலுவலர்கள் அனுமதி வழங்கியுள்ளார்கள். ( 2 ½ ஏக்கர்)
2) ஸ்ரீமாரியம்மன் நகர் அங்கீகாரம் இல்லாத மனைபிரிவில் சர்வே எண் 386/1A, 387/2A1,395/1ல் பல கட்டிடங்கள் பேரூராட்சி அனுமதியுடனும் அனுமதி இன்றியும் கட்டிடங்கள் கட்டப்பட்டு சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது
3) ஸ்ரீஅம்மன் நகர் சர்வே எண். 394/1–ல் (1ஏக்கர்) அங்கீகாரம் இல்லாத மனைப்பிரிவில் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. மேலும் மேற்படி ஒரு ஏக்கர் நிலத்தில் மனைப்பிரிவு அங்கீகாரத்தை பேரூராட்சி தலைவராக இருந்தவர் திரு. க. முருகேஸ்வரி தானே அங்கீகாரம் வழங்கி சீல் போட்டு மனைப்பிரிவு அங்கீகரித்துள்ளார். இது குறித்து மாவட்ட குற்றவியல் காவல்துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு ஜாமீனில் வெளிவந்து வழக்கை எதிர்கொண்டுள்ளார். வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. இந்நிலையில் மேற்படி மனைப்பிரிவில் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன.
4) <u>ஹைமாஸ் லைட்டு அமைத்தல்:-</u>

சேத்தூர் பேரூராட்சியில் சுமார் 50க்கும் மேற்பட்ட உயர்கோபுர மின்விளக்குகள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.3/– லட்சம் மதிப்பீட்டில்

அமைக்கப்பட்டுள்ளது. ஒரு லைட் அமைக்க மொத்தம் சுமார் ரூ.83,000/– வரைதான் செலவாகும் என்று பெறியாளர்கள் கணக்குப்படி தெரிய வருகிறது ஆனால் 3,00,000/– வரை பட்டியல் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு டெண்டர் கோரப்பட்டுள்ளதா என்ற விபரம் தெரியவில்லை.

5) <u>குடிநீர் குழாய் லீக் மற்றும் ரிப்பேர்:-</u>

சேத்தூர் பேரூராட்சியில் பல இடங்களில் அடிக்கடி குடிநீர் குழாய்களில் உடைப்பு ஏற்பட்டு ரிப்பேர் செய்துள்ளார்கள். ஒரு குடிநீர் உடைப்பை சரிசெய்ய ஒவ்வொரு லீக்கிற்கும் சுமார் 9500/– ,9600/–, 9800/– 9985/– என பில் போடப்பட்டு பேரூராட்சி நிதி கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. மேற்படி எந்த செலவுகளுக்கும் பேரூராட்சி மன்றத்தால் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏந்த அங்கீகாரமுமில்லாமல் கூடுதல் செலவு செய்துள்ள தொகைகளை உரிய நபரிடம் வசூல் செய்ய வேண்டும்.

6) <u>மோட்டார் ரிப்பேர்:-</u>

பேரூராட்சியில் மோட்டார்கள் மூலம் குடிநீர் ஏற்றப்பட்டு குடிநீர் சப்ளை 8 நாட்களுக்கு ஒரு முறை வழங்கப்பட்டு வருகிறது. குடிநீருக்கான மோட்டார்கள் ரிப்பேர் செலவு செய்த லிஸ்ட் ஒன்று 1/19 to 6/19 முடிய இணைத்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவர்கள் 6 மாதத்தில் செலவு செய்துள்ள தொகைக்கு பல புதிய மோட்டார்கள் வாங்கி பயன்படுத்தி இருக்கலாம்.இது குறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டுக் கொள்கிறேன்.

7) <u>கம்யூட்டர் ஆப்ரேட்டர் நியமனம்:-</u>

சேத்தூர் பேரூராட்சியில் கணினி இயக்குபவர் பணியிடம் டெண்டர் மூலம் நியமனம் செய்து பணி செய்து வருகிறார்கள். இதில் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள பேரூராட்சிகளில் மட்டும் டெண்டர் மூலம் சுமார் ரூ.20,000/– ரூ.22,000/– என்று தங்களுக்கு வேண்டிய தொகைக்கு எவ்வித விளம்பரமும் செய்யாமல் ஒவ்வொரு ஆண்டும் நியமனம் நடைபெற்று வருகிறது. அனைத்து பேரூராட்சி மற்றும் உதவி இயக்குநர் அலுவலகங்களில் முறையே வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயம் செய்யும் தொகைக்கு சம்பளம் வழங்க வேண்டும்.

உதவி இயக்குநர் கண்காணிப்பில் உள்ள மதுரை மாவட்டத்தில் ஒரு மாதிரியாவும் விருதுநகர் மாவட்டத்தில் ஒரு மாதிரியாகவும் கணினி இயக்குபவர்க்கு சம்பளம் வழங்கப்படுகிறது. இது குறித்து உதவி இயக்குநர் பேரூராட்சிகள் மதுரைக்கு மனுக்கள் அனுப்பியும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 14.02.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் சேத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

சேத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 22.05.2023 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

1) <u>ஸ்ரீமாரியம்மன் நகரில் வடிகால் மற்றும் சாலை அமைத்தல்:-</u>

விருதுநகர் மாவட்டம், சேத்தூர் தேர்வுநிலை பேரூராட்சி, மேட்டுப்பட்டி கிராமம் சர்வே எண்.386,387/2 இல் 8 ஏக்கர் 80 செண்ட் பரப்பளவில் உள்ள இடத்தில் கடந்த 2010-ஆம் ஆண்டு வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு 120 எண்ணம் விட்டு மனைகள் ஸ்ரீமாரியம்மன் நகர் என்ற

பெயரில் சேத்தூர் பேரூராட்சியின் 2வது வார்டு (தற்போது வார்டு எண் 4) பகுதியில் அமைந்துள்ளது. மேலும் மேற்படி வார்டு பகுதியில் அமையப்பட்ட மனைப் பகுதியில் அமைந்த சாலைகளானது பதிவுபெற்ற நன்கொடை ஆவணங்கள் (ஆவண எண்.05/2011 நாள்:03.01.2011, ஆவண எண்.593/2013 நாள்:27.01.2013) மூலம் சேத்தூர் பேரூராட்சிக்கு பதிவு செய்யப்பட்டு தானமாக வழங்கி பதிவு செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மேற்கண்டவாறு தானமாக ஒப்படைக்கப்பட்ட தெருக்கள் அனைத்தும் சேத்தூர் பேரூராட்சி மன்ற தீர்மான எண்.482 நாள்:28.05.2014ன்படி அனுமதித்து ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேலும் மேற்படி பகுதியில் அமைந்த அனைத்து மனைகளும் 20.10.2016–க்கு முன்பாகவே பத்திரப்பதிவு செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனைகளில் DTCP ஒப்புதலின் பேரில் மட்டுமே உரிய கட்டணங்கள் வசூலித்து கட்டட அனுமதி வழங்கி வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் தற்போது சுமார் 43 வீடுகள் அமைந்துள்ளது. மேலும் தற்போது DTCPஇல் அனுமதி பெறப்பட்ட மனைகளில் சுமார் 80 மனைகளுக்குரிய ஆணை நகல் சம்பந்தப்பட்ட நபர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது முந்தைய காலகட்டங்களில் இப்பேரூராட்சி மூலம் குடிநீர் விநியோக குழாய்கள் பதித்து நாளது வரை குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது. மேற்படி பகுதியில் தெருவிளக்கு வசதியும் பேரூராட்சி மூலம் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் மேற்படி பகுதி மக்களின் குடிநீர் நலன் கருதி பொதுநிதித் திட்டம் 2013-2014இல் ரூ.6.30 இலட்சம் மதிப்பீட்டில் ஆழ்துளை கிணறு அமைத்து பைப்லைன் பதித்து குடிநீர் விநியோகமானது நாளது வரை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் நன்கொடை ஆவணம் (ஆவண எண்.593/2013 நாள்:27.02.2013) மூலம் இப்பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட பொது திறவிடத்தில் (323.886 ச.மீ.+202.500 ச.மீ.) இப்பேரூராட்சி மூலம் பொதுநிதித் திட்டம் 2013-2014இன் கீழ் ரூ.4.60 இலட்சம் மதிப்பீட்டில் கழிப்பறைகள் கட்டப்பட்டு மேற்படி பகுதி மக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

மேலும் அரசாணை (நிலை) எண்.172 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள்:13.10.2017இல் ஏற்கனவே அமைந்த அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளுக்கு (20.10.2016 அன்று அல்லது அதற்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட) பொதுதிறவிட பயன்பாட்டிற்கான நிலத்தினை பெறுவதிலிருந்து விலக்களிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(3) in rule 7,-

(b) in clause (e), after sub-clause (iv), the following clause shall be added, namely:-

" **(v) The individual plot in a layout or a sub-division that were already sold shall be regularized with full exemption from the Open Space Reservation requirements of Development Regulations or Development Control Regulations.**";

மேலும் மேற்படி அரசாணையில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"அரசாணை (நிலை) எண்.78 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்:04.05.2017 மற்றும் அரசாணை (நிலை) எண்.172 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்:13.10.2017 ஆகியவற்றில் 20.10.2016 அன்று அல்லது அதற்கு முன்னர் பதிவு செய்யப்பட்டிருப்பின் அந்த மனைப்பிரிவில் அமையும் விற்கப்பட்ட மற்றும் விற்கப்படாத அனைத்து மனை மற்றும் மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்த மேற்படி அரசாணைகளில் குறிப்பிட்டுள்ள அனைத்து விதிகளுக்கு உட்பட்டு எவ்வித மாற்றமும் இல்லாமல் 28.02.2021 வரை கால நீட்டிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது."

இவ்வாறாக அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளில் 20.10.2016–க்கு அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பதிவு செய்யப்பட்ட மனைப்பிரிவில் அமையும் விற்கப்பட்ட மற்றும் விற்கப்படாத அனைத்து மனைப்பிரிவுகளையும் வரன்முறைப்படுத்த 28.02.2021 வரை கால நீட்டிப்பு செய்ததின் பேரில் மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள வரன்முறைப்படுத்தப்படாத மனைகள் உரியவாறு விண்ணப்பிக்கப்பட்டு நகர் ஊரமைப்புத் துறை மூலம் அனுமதி வழங்கி வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி பகுதியில் அமைந்துள்ள சாலைகள் அனைத்தும் பேரூராட்சியின் சாலைப்பதிவேட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது. அதன்பேரில் தற்போது அப்பகுதி மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்ய வேண்டியதிருப்பதால் சர்வே எண்.386, 387/2இல் 8 ஏக்கர் 80 செண்ட் பரப்பளவில் உள்ள நிலத்தில் 120 எண்ணம் மனை நிலங்களாக பிரிக்கப்பட்டு 20.10.2016இக்கு முன்னர் விற்பனை செய்யப்பட்டுள்ளதால் விற்கப்பட்ட மனைகளுக்கு பொதுதிறவிடம் பெற தேவையில்லை என மேற்படி அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரமானது மாண்பமை முறைமன்ற நடுவர் அவர்களின் கனிவான பார்வைக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

மேலும் நான் கடந்த 01.11.2021ஆம் தேதி முதல் சேத்தூர் பேரூராட்சியில் செயல் அலுவலராகப் பணிபுரிந்து வருகிறேன். ஆனால் சேத்தூர் பேரூராட்சி ஸ்ரீமாரியம்மன் நகர் சாலைகள் அனைத்தும் பேரூராட்சியின் பராமரிப்பில் எடுக்கப்பட்டு 2019-2020ஆம் ஆண்டு சாலைப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு, அவை பேணப்பட்டு வந்த நிலையில் முந்தைய செயல் அலுவலரால் சென்னை பேரூராட்சிகளின் ஆணையர் அவர்களுக்கு கருத்துரு (ந.க.எண்.154/2020 நாள்:21.09.2021இன்படி) சமர்ப்பிக்கப்பட்டு அதன்பேரில் அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:30.10.2021–இன்படி கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021-2022இன் கீழ் ஸ்ரீமாரியம்மன் நகரில் வடிகால் மற்றும் தார்ச்சாலை அமைப்பதற்கு ரூ.123.45 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டிருந்தது. அதன்பேரில் சென்னை பேரூராட்சிகளின் ஆணையரக கண்காணிப்புப் பொறியாளர் செயல்முறைகள் ந.க.எண்.11538/2021/ஆ4 நாள்:17.11.2021இன்படி தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் அனைத்தும் சென்னை பேரூராட்சிகளின் ஆணையரகத்தால் மேற்கொள்ளப்பட்டது.

சென்னை பேரூராட்சிகளின் ஆணையர் அவர்களால் ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிக்கை ந.க.எண்.11538/2021/ஆ4 நாள்:16.11.2021இன்படி 37 மாவட்டங்களில் ரூ. 322.33 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தப் புள்ளி கோரும் அறிவிப்பானது The New Indian Express முரசொலி ஆகிய தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களிலும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் ஆகியவற்றில் 18.11.2021ஆம் தேதியன்று விளம்பரம் அறிவிப்பு செய்யப்பட்டது.

மேலும் உரிய விதிமுறைகளைப் பின்பற்றி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.154/2020 நாள்:19.11.2021இன்படி பேரூராட்சி மூலமும் இப்பேரூராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்தகாரர்களுக்கு சார்பு செய்யப்பட்டுள்ளது. முறையாக அறிவிப்பு செய்யப்பட்டும், பின்னர் ஒப்பந்தப்புள்ளி அழைப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளி நமூனா ஆகியன தமிழ்நாடு அரசின் http://tntenders.gov.in.ஆகிய இணையதளங்கள் வாயிலாக பதிவேற்றம் செய்தும் ஒப்பந்தப்புள்ளி முறையாக விளம்பரம் செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பின்னர் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் உதவி செயற்பொறியாளர், உதவிப் பொறியாளர் ஆகியோர் அடங்கிய தொழில்நுட்ப குழுவினரால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு தகுதியான ஒப்பந்தப்புள்ளிகள் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் குறிப்பிட்டு வரப்பெற்ற ஒப்பந்தகாரர் திரு. ஆ. ராஜதுரை என்பவரின் ஒப்பந்தப்புள்ளியானது தனி அலுவலரின் முன் அனுமதியின் மூலம் அனுமதிக்கப்பட்டதின் பேரில் 10.12.2021ஆம் தேதியன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டு அதன் பின்னர் மேற்படி முன்அனுமதி வழங்கப்பட்ட விபரமானது இப்பேரூராட்சி மன்ற தீர்மானம் எண் 6 நாள் 21.01.2022இன்படி அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் மேற்படி பணியானது 04.01.2022ஆம் தேதியன்று துவக்கி வைக்கப்பட்டது. மேற்படி பணிகள் சேத்தூர் பேரூராட்சி தொகுப்பு உதவிப் பொறியாளரின் கண்காணிப்பில் நடைபெற்றது. மேலும் மேற்படி பணியானது சென்னை பேரூராட்சிகளின் இயக்குநரக கண்காணிப்புப் பொறியாளர் மற்றும் மதுரை மண்டல பேரூராட்சிகளின் செயற் பொறியாளர், உதவி செயற் பொறியாளர் ஆகியோரால் பார்வையிட்டு கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பின்னர் சென்னை டுபிட்கோ நிறுவனத்தைச் சேர்ந்த தொழில்நுட்ப அலுவலரால் மூன்றாம் நபர் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறாக மேற்படி பணி அப்பகுதி மக்களின் நலன் கருதி முறையாக பணி நடைபெற்று முடிவுற்றுள்ளது என்ற விபரம் மாண்பமை முறைமன்ற நடுவர் அவர்களின் கனிவான பார்வைக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2) <u>கழிப்பிடம் பழுதுபார்த்தல் வேலைகள்</u>

விருதுநகர் மாவட்டம், சேத்தூர் தேர்வுநிலைப் பேரூராட்சியில் 24 எண்ணம் சமுதாய கழிப்பறைகள் மற்றும் 2 எண்ணம் பொதுக் கழிப்பறைகள் உள்ளது. மேற்படி கழிப்பறைகள் கட்டி நீண்ட காலங்கள் ஆகிவிட்டதால் பெரும்பாலான கழிப்பிடங்கள் பழுதடைந்த நிலையில் இருந்தது. மேற்படி கழிப்பிடங்களை 2022-2023ஆம் ஆண்டிற்கு 23.03.2022ஆம் தேதியில் பொது ஏலம்

நடத்தப்பட்டு ஏல நடவடிக்கைகளை அங்கீகரிக்க மன்ற கூட்டத்தில் பொருள் வைக்கப்பட்டதில் பேரூராட்சி மன்ற தீர்மானம் எண் 11 நாள்:30.03.2022–இல் சேத்தூர் பேரூராட்சியிலுள்ள பெரும்பாலான கழிப்பறைகள் பழுதடைந்துள்ள நிலையில் பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்து வருவதால் அதனை சீரமைத்த பின்னர் ஏல நடவடிக்கைக்கு கொண்டு வரலாம் என்றும் அதுவரையில் பேரூராட்சி நிர்வாகத்தின் மூலம் தொடர்ந்து பராமரிக்கவும் முடிவு செய்து ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு 30.03.2022 தேதியில் நடைபெற்ற ஏல நடவடிக்கைகள் அனைத்தும் மன்றத்தால் ரத்து செய்யப்பட்டது.

பின்னர் பழுதடைந்த கழிப்பறைகளை பழுதுநீக்கம் / மராமத்துபணி செய்ய சேத்தூர் பேரூராட்சி மன்ற தீர்மானம் எண்.25 நாள்:29.04.2022இன்படி பேரூராட்சி மன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு உதவிப்பொறியாளரால் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு மராமத்துப்பணிகளை பொதுநிதித் திட்டம் 2022-2023இன் கீழ் மேற்கொள்ள மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.28482/2022/பே1 நாள்:14.06.2022இன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கழிப்பிடங்களை மராமத்து செய்ய நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட விபரமானது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டு (மன்ற தீர்மானம் எண்.58 நாள்:30.06.2022) 07.07.2022ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் இப்பேரூராட்சி மன்ற தீர்மானம் எண்.105 நாள்:26.10.2022இன்படி அனுமதிக்கப்பட்டுள்ளன. மேற்படி அனைத்து நடவடிக்கைகளும் மன்றக்கூட்ட அஜண்டா மூலம் அனைத்து உறுப்பினர்களுக்கும் முறையாக சார்பு செய்யப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மனுதாரரான 8ஆவது வார்டு உறுப்பினர் திரு. அ. செவலூர்பாண்டியன் என்பவரும் 30.03.2022, 29.04.2022 மற்றும் 26.10.2022 ஆகிய தேதிகளில் நடைபெற்ற மன்றக்கூட்டங்களில் வருகை புரிந்து கூட்ட நடவடிக்கைகளில் கலந்து கொண்டுள்ளார். தலைவர் உட்பட அனைத்து உறுப்பினர்களாலும் மேற்படி தீர்மானங்கள் ஏகமானதாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் புகாரில் மனுதாரரால் மந்தைத் தெருவில் இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2013-2014இன் கீழ் கட்டப்பட்ட கழிப்பறை தொடர்பாக ஏற்கனவே தனியரால் புகார் அனுப்பப்பட்டு அதன் பேரில் மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோரால் கள ஆய்வு செய்யப்பட்டது. பின்னர் மனுதாரருக்கு உரிய விபரங்கள் எடுத்துரைக்கப்பட்டதின் பேரில் மேற்படி புகாரின் மீது எவ்வித நடவடிக்கையும் தேவையில்லை என தெரிவித்து கொடுத்துள்ள கடித நகல் மாண்பமை முறைமன்ற நடுவர் அவர்களின் கனிவான பார்வைக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இவ்வாறாக கழிப்பிட பராமரிப்பு அனைத்தும் மன்றத்தின் இசைவுடன் முறையாக மதிப்பீடுகள் தயார் செய்து தொழில்நுட்ப அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொண்டு பணி முடிவுற்றுள்ளது என்ற விபரம் மாண்பமை முறைமன்ற நடுவர் அவர்களின் கனிவான பார்வைக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**3)அங்கீகாரம் இல்லாத வீட்டு மனைகளில் வீடு கட்ட அனுமதி வழங்கியதாக தெரிவிக்கப்பட்ட புகார்.**

1) **அருணா ரைஸ் மில் வளாகம்:**

ஏற்கனவே முந்தைய காலகட்டங்களில் பணிபுரிந்த செயல் அலுவலர்களால் நகர ஊரமைப்புத் துறை அனுமதி பெற்ற மனைகளுக்கு உரிய விதிமுறைகளின்படி கட்டட வரைபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி சர்வே எண் 400/2, 400/10இல் உள்ள மனைகள் 20.10.2016க்கு முன்னர் அமைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்ட மனைப்பிரிவுகள் ஆகும். தற்போது DTCP அனுமதி பெறப்பட்ட மனைகளுக்கு மட்டுமே உரிய கட்டணம் வசூல் செய்து கட்டட உரிமை வழங்கப்பட்டு வருகிறது. தற்போது புதிய கட்டட வரைபட அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை.

மேலும் தற்போது நடைபெற்றுவரும் சொத்துவரி சீராய்வினை முன்னிட்டு பேரூராட்சிக்கு வருவாயை பெருக்கும் நடவடிக்கையாக பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க. 24110/2022.இ5 நாள் 01.09.2022இன்படி தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டங்களின் 1920 பிரிவு 82இன்படி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து கட்டிடங்களுக்கும் மனைகளுக்கும் விரிவிதிப்பு செய்ய வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் கட்டிட விதிகளுக்கு முரணாக அல்லது அனுமதியின்றி கட்டடப்பட்ட கட்டிடங்களுக்கு நிபந்தனைகளுக்குட்பட்டு சொத்துவரி விதிப்பு செய்யலாம் என அரசாணை (நிலை எண். 161 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள் 14.01.2000 இல் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை–1 ந.க.எண்.1469/2023/இ5 நாள் 02.2023–ன்படியும் சொத்துவரி விதிப்பு மேற்கொள்ள நடவடிக்கையில் உள்ளது என்ற விபரம் மாண்பமை முறைமன்ற நடுவர் அவர்களின் கனிவான பார்வைக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**2) ஸ்ரீமாரியம்மன் நகர்**

விருதுநகர் மாவட்டம் சேத்தூர் தேர்வுநிலைப் பேரூராட்சி, மேட்டுப்பட்டி கிராமம் சர்வே எண்.386, 387/2இல் 8 ஏக்கர் 80 செண்ட் பரப்பளவில் உள்ள இடத்தில் கடந்த 2010ஆம் ஆண்டு வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு 120 எண்ணம் வீட்டு மனைகள் ஸ்ரீமாரியம்மன் நகர் என்ற பெயரில் சேத்தூர் பேரூராட்சியின் 2வது வார்டு பகுதியில் அமைந்துள்ளது. மேலும் மேற்படி வார்டு பகுதியில் அமையப்பட்ட மனைப்பகுதியில் அமைந்த சாலைகளானது நன்கொடை ஆவணம் (ஆவண எண். 05/2011 நாள் 03.01.2011, ஆவண எண் 593.2013 நாள் 27.02.2013) மூலம் சேத்தூர் பேரூராட்சிக்கு பதிவு செய்யப்பட்டு தானமாக வழங்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து மேற்கண்டவாறு தானமாக ஒப்படைக்கப்பட்ட தெருக்கள் அனைத்தும் பேரூராட்சி மன்ற தீர்மான எண். 482 நாள் 28.05.2013இன்படி அனுமதித்து

ஏற்றுக்கொள்ளப்பட்டது, மேலும் மேற்படி பகுதியில் அமைந்த மனைகளில் பெரும்பாலான வீடுகளுக்கு DTCP ஒப்புதலின் பேரில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது,

3) அம்மன் நகர்

மதுரை மண்டல நகர ஊரமைப்பு அலுவலக துணை இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.6004/2018, மம4 நாள்:11.01.2019 இன்படி சேத்தூர் தேர்வுநிலை பேரூராட்சி, சேத்தூர் கிராமம் புல எண்.394 (ப)-இல் 2.07 ஏக்கர் (8376.99 ச.மீ.) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

அதன்பேரில் அரசாணை மற்றும் நகர் ஊரமைப்புத் துறை துணை இயக்குநரின் செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டவாறு கூராய்வு கட்டணமாக ரூ.9000/- (ரூபாய் ஒன்பதாயிரம் மட்டும்) பேரூராட்சியில் 29.6.2018இல் செலுத்தப்பட்டுள்ளது. முறைப்படுத்துதல் கட்டணம் ரூ.82,740/- (ரூபாய் எண்பத்து இரண்டாயிரத்து எழுநூற்று நாற்பது மட்டும்) அரசு தலைப்பில் 21.01.2019இல் செலுத்தப்பட்டுள்ளது. வளர்ச்சிக் கட்டணம் ரூ.1,86,150/- (ரூபாய் ஒரு லட்சத்து எண்பத்து ஆறாயிரத்து நூற்று ஐம்பது மட்டும்) யூனியன் வங்கி வரைவோலை எண்.723995 நாள்:16.02.2019இன்படி பேரூராட்சியில் செலுத்தப்பட்டு நிபந்தனைகளுக்குட்பட்டு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதன்பேரில் இப்பேரூராட்சி செயல் அலுவலரின் நடவடிக்கைகள் ந.க.எண்.451/2018 நாள்:08.03.2019இன்படி சர்வே எண்.394 (ப)-இல் அமைந்துள்ள மனைப்பிரிவில் மனை எண்.1 முதல் 16 முடிய, 18 மற்றும் 19 ஆகிய மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்தி கொள்கையளவிலான தனி மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் தான செட்டில்மெண்ட் பத்திரம் எண்.270/2019 நாள்:06.02.2019 இன்படி பூங்கா (282.42 ச.மீ. (10.24%) மற்றும் சாலை பயன்பாட்டிற்கான இடங்கள் சேத்தூர் பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட சாலைகள் பேரூராட்சி அலுவலக சாலைப்பதிவேட்டில் பதிவு செய்து பராமரிப்பதற்கும் மற்றும் பூங்கா பயன்பாட்டிற்கான இடத்தினை பேரூராட்சி மூலம் வேலி அமைத்து பராமரிக்கவும் இப்பேரூராட்சி மன்ற 18.05.2022ஆம் தேதிய சாதாரணக்கூட்ட தீர்மானம் எண்.35இன்படி அனுமதித்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்மானம் தொடர்பான மன்ற அஜண்டா மனுதாரருக்கு முறையாக சார்பு செய்யப்பட்டு மேற்படி மன்றக்கூட்ட நடவடிக்கையில் சம்பந்தப்பட்ட மனுதாரரான திரு. அ. செவலூர் பாண்டியன் என்பவரும் கலந்து கொண்டுள்ளார் என்ற விபரமும் மாண்பமை முறைமன்ற நடுவர் அவர்களின் கனிவான பார்வைக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

மேலும் அம்மன் நகர், ஸ்ரீமாரியம்மன் நகர், அருணா ரைஸ்மில் வளாகம் மற்றும் நடுவக்குளம் செல்லும் பாதையில் உள்ள தார்ச்சாலையின் அருகில் உள்ள இடங்களில் கட்டப்பட்ட வீடுகளுக்கு அட்டவணை எண்.3இல் காணும் விபரப்படி உரிய விதிமுறைகளின்படி கட்டட வரைபட அனுமதி வழங்கப்பட்டு வரிவதிப்பு செய்யப்பட்டுள்ளது.

நாளது தேதியில் எந்த ஒரு கட்டட வரைபட அனுமதியும் வழங்கப்படவில்லை. மேலும் தற்போது நடைபெற்றுவரும் சொத்துவரி சீராய்வினை முன்னிட்டு பேரூராட்சிக்கு வருவாயை பெருக்கும் நடவடிக்கையால் பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.24110/2022/இ5 நாள்:01.09.2022இன்படி 1920ஆம் ஆண்டு, தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டங்களின் பிரிவு 82இன்படி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து கட்டிடங்களுக்கும் மனைகளுக்கும் வரிவிதிப்பு செய்ய வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் கட்டிட விதிகளுக்கு முரணாக அல்லது அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு நிபந்தனைகளுக்குட்பட்டு சொத்துவரி விதிப்பு செய்யலாம் என அரசாணை நிலை எண்.161 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்:14.01.2000 இல் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையிலும் சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை –1 ந.க.எண்.1469/2023/இ5இன்படியும் சொத்துவரி விதிப்பு மேற்கொள்ள நடவடிக்கையில் உள்ளது என்ற விபரம் மாண்பமை முறைமன்ற நடுவர் அவர்களின் கனிவான பார்வைக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

3) <u>ஹைமாஸ் லைட்டு அமைத்தல்</u>

சேத்தூர் பேரூராட்சியில் அமைக்கப்பட்ட ஒளிரும் உமிழ் மின் விளக்குகள் (LED) மதிப்பிற்குரிய இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தில் விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் தலைவர் / மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.சி.3/3003/2019 நாள்:29.08.2019இன்படி 10 இடங்களில் அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு அதனைத் தொடர்ந்து உரிய விதிமுறைகளின்படி ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் மாண்பமை முறைமன்ற நடுவர் அவர்களின் கனிவான பார்வைக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

சேத்தூர் பேரூராட்சியில் 2019-2020ஆம் ஆண்டு இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் LED விளக்குகள் அமைத்தல் பணிகளுக்கு விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் தலைவர் / மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.சி3/3003/2019 நாள்:22.11.2019இன்படி 10 (பத்து) இடங்களுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு அதனைத் தொடர்ந்து உரிய விதிமுறைகளின்படி ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

சேத்தூர் பேரூராட்சியில் 2019-2020ஆம் ஆண்டு இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் LED விளக்குகள் அமைத்தல் பணிகளுக்கு விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் தலைவர் / மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.சி3/3003/2019 நாள்:03.02.2020இன்படி 3 (மூன்று) இடங்களில் மின்விளக்குகள் அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு

அதனைத் தொடர்ந்து உரிய விதிமுறைகளின்படி ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

சேத்தூர் பேரூராட்சியில் 2019-2020ஆம் ஆண்டு இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் LED விளக்குகள் அமைத்தல் பணிகளுக்கு விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் தலைவர் / மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.சி3/3003/2019 நாள்:28.02.2020இன்படி 10 (பத்து) இடங்களில் மின்விளக்குகள் அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு அதனைத் தொடர்ந்து உரிய விதிமுறைகளின்படி ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

சேத்தூர் பேரூராட்சியில் 2019-2020ஆம் ஆண்டு இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் LED விளக்குகள் அமைத்தல் பணிகளுக்கு விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் தலைவர் / மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.சி3/3003/2019 நாள்:05.08.2020–ன்படி வார்டு எண்.3ல் கல்லக்கரை முக்கு என்ற இடத்தில் மின்விளக்கு அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு அதனைத் தொடர்ந்து உரிய விதிமுறைகளின்படி ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

சேத்தூர் பேரூராட்சியில் 2020-2021ஆம் ஆண்டு இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் LED விளக்குகள் அமைத்தல் பணிகளுக்கு விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் தலைவர் / மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.சி3/2137/2020 நாள்:01.09.2020இன்படி 10 (பத்து) இடங்களில் மின்விளக்குகள்ள் அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு அதனைத் தொடர்ந்து உரிய விதிமுறைகளின்படி ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

சேத்தூர் பேரூராட்சியில் 2020-2021ஆம் ஆண்டு இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் LED விளக்குகள் அமைத்தல் பணிகளுக்கு விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் தலைவர் / மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.சி3/2137/2020 நாள்:09.12.2020இன்படி 20 (இருபது) இடங்களில் மின்விளக்குகள் அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு அதனைத் தொடர்ந்து உரிய விதிமுறைகளின்படி ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

அனைத்து பணிகளும் முடிவுற்ற பின்னர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு புகைப்படங்களுடன்கூடிய பணி முடிவு அறிக்கைகள் முறையாக சமர்ப்பிக்கப்பட்டு

அதன்பேரில் நிதி விடுவிக்கப்பட்டு பேரூராட்சி நிதியில் வரவு வைக்கப்பட்டுள்ளது என்ற விபரமும் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. இதில் எவ்வித விதிமீறல், நிதியிழப்பு மற்றும் முறைகேடு ஏதுமில்லை என்ற விபரம் மாண்பமை முறைமன்ற நடுவர் அவர்களின் கனிவான பார்வைக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**(5) குடிநீர் குழாய் லீக் மற்றும் ரிப்பேர் :**

சேத்தூர் பேரூராட்சியில் குடிநீர் விநியோக குழாய்களில் உடைப்பு ஏற்படும் பொழுது பொதுமக்களின் குடிநீர் நலன் மற்றும் நிர்வாக நலன் கருதி அவ்வப்போது உடனுக்குடன் பழுதுநீக்கப்பணிகள் அனைத்தும் முறையாக பேரூராட்சிப் பணியாளர்களிடம் அறிக்கை பெற்று அதன் அடிப்படையில் ஒப்பந்ததாரரின் மூலம் குடிநீர் குழாய் பழுதுநீக்கம் செய்யப்பட்டு பல பழுதுநீக்கப்பணிகளையும் சேர்த்து ஒரே பட்டியலாக அனுமதித்து தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும் பழுதுநீக்கப்பணிகள் மேற்கொண்டமைக்கு GPS MAP camera மூலம் புகைப்படம் எடுக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டு வருகிறது என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது.

மனுதாரரால் சுட்டிக்காட்டப்பட்ட காலகட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட குடிநீர் குழாய் பழுதுநீக்கப்பணிகள் அனைத்தும் உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறை மூலம் முறையாக தணிக்கை மேற்கொள்ளப்பட்டு சுட்டிக்காட்டப்பட்ட தணிக்கைத்தடைகள் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் பின்னேற்பின் அடிப்படையில் தடை நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

சென்னை பேரூராட்களின் இயக்குநரக சுற்றறிக்கை நக.எண். 17133/2007/இ3, நாள் 17.09.2007இன்படி செயல் அலுவலர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் வரிசை எண் 18இல் மாதாந்திர வரவு செலவு பற்றிய சுருக்கத்தை மாதாந்திரக் கூட்டங்களில் தவறாமல் பார்வைக்கு வைத்தல் வேண்டும் (பிரிவு 15/16) என தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் தற்போது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அடங்கிய மன்றத்தில் செலவினங்கள் அனைத்தும் செலவுச்சீட்டு வாரியாக மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டு மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் மாண்பமை முறைமன்ற நடுவர் அவர்களின் கனிவான பார்வைக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**6) மோட்டார் ரிப்பேர்**

சேத்தூர் பேரூராட்சி பகுதியில் குடிநீர் விநியோக தலைமை நீரேற்று நிலையம் மற்றும் ஆழ்துளை கிணறு உள்ள பகுதிகளில் பிற சிலநேரங்களில் இருமுனை மின்சாரம் மட்டுமே கிடைக்கப்பெறுவதால் 3 phase மின்மோட்டர்கள் இயக்க இயலாத சூழ்நிலையில் கண்டன்சர் பயன்படுத்தி மின் மோட்டர்கள் இயக்கப்படுகிறது. இதனால் மின்மோட்டார்கள் அடிக்கடி பழுது ஏற்படுகிறது. எனவே பொதுமக்களின் குடிநீர் விநியோக நலன் மற்றும் நிர்வாக நலன் கருதி உடனடியாக சீரான குடிநீர் வழங்க வேண்டியஅவசியம் கருதியும் உடனுக்குடன் பழுது நீக்கம் செய்து பயன்படுத்தப்பட்டு வருகிறது.

பழுது நீக்கப் பட்டியல்கள் அனைத்தும் ரூ.10,000/–க்கு உட்பட்டே அனுமதிக்கப்பட்டுள்ள காரணத்தால் வருமானவரி பிடித்தம் செய்யப்படவில்லை என்ற விபரம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது.

**7) கம்ப்யூட்டர் ஆப்ரேட்டர் நியமனம்**

சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 3628/2010/ஆ3 நாள் 08.11.2013இல் பேரூராட்சிகளில் எந்தவொரு பணியிடத்திற்கும் தினக்கூலி அடிப்படையில் பணிநியமனம் மேற்கொள்ள கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் பேரில் அனைத்து பேரூராட்சிகளிலும் கணினி இயக்குபவர் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதே நடைமுறையைப் பின்பற்றி சேத்தூர் பேரூராட்சியிலும் கணினி இயக்குதல் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணிகள் ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பாக 2013–2014 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கை பத்தி 54இல் நிதியிழப்போ முறைகேடோ சுட்டிக்காட்டப்படாமல் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் மேற்கொண்டமைக்கு உரிய பின்னேற்பு பெற வேண்டுமென தடை எழுப்பப்பட்டு 14.05.2015–ஆம் தேதியன்று நடைபெற்ற தணிக்கை கூட்டமர்வில் பின்னேற்பு பெறப்பட்டு மேற்படி தணிக்கைத்தடையானது தடைநீக்கம் செய்யப்பட்டுள்ளது இதர ஆண்டுகளுக்கான தணிக்கையில் கணினி இயக்குபவர் பணிக்கான ஒப்பந்த நியமனம் தொடர்பாக குறைபாடு மற்றும் முறைகேடு ஏதும் சுட்டிக்காட்டப்படவில்லை.

மேலும் மேற்படி கணினி இயக்குதல் பணிக்கு தினக்கூலி அடிப்படையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவில்லை. மாதாந்திர ஊதியத்தின் அடிப்படையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்குரிய செலவினங்கள் முழுவதும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டு மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் கடிதத்தின்படி பேரூராட்சிகளில் புதிய கணினி பணியிடங்கள் உருவாக்கி அப்பணியிடங்கள் ஏற்கனவே பேரூராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வரும் கணினி இயக்குபவர்களை ஈர்த்துகொள்ள அந்தந்த மாவட்ட ஆட்சியர் அவர்களின் பரிந்துரையுடன் கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளது என்ற விபரமும் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே மேற்படி அறிக்கையினை மாண்பமை உள்ளாட்சி முறைமன்ற நடுவர் கனிவுடன் பரிசீலித்து தன்னிச்சையாக தெரிவிக்கப்பட்ட புகார் மனுவை நிராகரித்து நிர்வாக நலன் காக்க வேண்டி பணிந்து வேண்டிக்கேட்டுக் கொள்ளப்படுகிறது என தெரிவித்துள்ளார்.

3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவத்தில் 22.05.2023 அன்றைய விசாரணைக்கு நேரில் ஆஜராகுமாறு 09.05.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

22.05.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் மனுதாரர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"விருதுநகர் மாவட்டம் சேத்தூர் பேரூராட்சியின் 8வது வார்டு கவுன்சிலராக தற்போது பதவி வகித்து வருகிறேன். விருதுநகர் மாவட்டம் சேத்தூர் பேரூராட்சி மாரியம்மன் நகரில் 8 ஏக்கர் இடத்தில் பிளாட் போடப்பட்டது. ஆனால் அதற்கான திறந்தவெளி இடத்தை பேரூராட்சிக்காக ஒதுக்கப்படவில்லை. மேலும் சட்டமன்ற உறுப்பினர் நிதியின் மூலம் 5 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 4 – 5 கழிப்பிடங்கள் உபயோகப்படுத்தாமலேயே மூடியிருந்த நிலையில், அவற்றை பழுது நீக்கம் செய்ய ரூபாய் 15 லட்சம் பேரூராட்சியால் செலவிடப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட பேரூராட்சியில் மின் விளக்குகள் அமைக்க ஒவ்வொரு விளக்கிற்கும் ரூபாய் 3 லட்சம் வீதம் 60 விளக்குகள் பொருத்தப்பட்டன. ஆனால் ஒரு மின்விளக்கு அமைப்பதற்கு ரூபாய் 1 லட்சமே போதுமானதாகும். அதே போன்று பேரூராட்சியில் உள்ள பழுதடைந்த குடிநீர் குழாயை பழுதுபார்க்க ரூபாய் இரண்டாயிரத்திற்கு பதிலாக பத்தாயிரம் முதல் பதினைந்தாயிரம் ரூபாய் வரை பேரூராட்சியில் செலவிடப்பட்டுள்ளது என்பதை இம் முறை மன்றத்தில் தெரிவித்துக்கொண்டு இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களையும், சில ஆவணங்களின் நகல்களையும் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் எனது 22.5.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிகிறன்.''

சேத்தூர் பேரூராட்சியின் செயல் அலுவலர் 22.05.2023 அன்று இம்முறை மன்றத்தின் நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

''விருதுநகர் மாவட்டம் ஸ்ரீமாரியம்மன் நகரில் 8 ஏக்கர் 80 செண்ட் பரப்பளவுகொண்ட இடத்தில் 2010ம் ஆண்டில் வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு, 120 வீட்டு மனைகள் அப்பகுதியில் அமைந்துள்ளது. மேற்கண்ட மனைப் பகுதியில் அமைந்துள்ள சாலைகளை சேத்தூர் பேரூராட்சிக்கு தானமாக வழங்கி பதிவு செய்யப்பட்டுள்ளது. மன்ற தீர்மான நாள் 28.5.2013ன்படி அனுமதித்து ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். மேற்கண்ட மனைகள் 20.10.2016க்கு முன்பாகவே பத்திரப்பதிவு செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு, DTCP ஒப்புதலின் பேரில் உரிய கட்டணங்கள் வசூலித்து கட்டட அனுமதி வழங்கி வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட வீட்டுமனைகள் 20.10.2016க்கு முன்பே பத்திரப் பதிவு செய்யப்பட்டதால், அரசாணை (நிலை) எண் 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் 13.10.2017ன் படி பொது திறந்த வெளி இடத்தை ஒதுக்கீடு செய்ய விலக்களிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கட்டப்பட்டஒரு கழிப்பிடம் உட்பட 24 கழிப்பிடங்களில் பெரும்பாலான கழிவறைகள் பழுதடைந்த நிலையில் அதனை சீரமைக்க பேரூராட்சியால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு 14.6.2022ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு மேற்கண்ட பழுதுகள் நீக்கப்பட்டுள்ளன. எனவே, மனுதாரர் தெரிவித்துள்ள பயன்பாடற்ற கழிப்பிடத்திற்கு பழுது நீக்கம் செய்ய ரூ 15 லட்சம் செலவு செய்யப்பட்டது என்கின்ற குற்றச்சாட்டு உண்மையல்ல.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள மின் விளக்குகள் அமைத்தல், குடிநீர் குழாய் மற்றும் மோட்டார் பழுது பார்த்தல் போன்ற புகார்களில் எவ்வித உண்மைத் தன்மையும் இல்லை. இது தொடர்பாக இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் எனது 22.5.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையே எனது வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். '' என தெரிவித்துள்ளார்.

4) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்கு மூலம் சேத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் உரிய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

விருதுநகர் மாவட்டம், சேத்தூர் தேர்வுநிலை பேரூராட்சி மேட்டுப்பட்டி கிராமம் சர்வே எண். 386, 387/2ல் மாரியம்மன்நகர் என்ற பெயரில் அமையப்பட்ட மனைப் பகுதியில் அமைந்த சாலைகள் பதிவுபெற்ற நன்கொடை ஆவணங்கள் மூலம் தானமாக பேரூராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது என்பது ஆவணங்கள் மூலம் தெரியவருகிறது. மேலும் மேற்படி பகுதியில் அமைந்த மனைகள் 20.10.2016க்கு முன்பாகவே பத்திரப்பதிவு செய்யப்பட்டு விற்பனையாகியுள்ளது. DTCP ஒப்புதலின் பேரில் மட்டுமே உரிய கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு கட்டட அனுமதி வழங்கி வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. நன்கொடை ஆவணம் மூலம் பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட பொது இடத்தில் பொதுநிதித் திட்டம் 2013–2014ன் கீழ் ரூ. 4.60 இலட்சம் மதிப்பீட்டில் கழிப்பறைகள் கட்டப்பட்டு மேற்படி பகுதி மக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேலும் அரசாணை (நிலை) எண்.172, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 13.10.2017–ல் ஏற்கனவே அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளுக்கு 20.10.2016 அல்லது அதற்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட மனைகள் தொடர்பாக "பொதுதிறவிட" பயன்பாட்டிற்கான நிலம் பெறுவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. அதன்படி 20.10.2016 மற்றும் அதற்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட மனைப்பிரிவுகளில் அமைந்துள்ள விற்கப்பட்ட மற்றும் விற்கப்படாத அனைத்து மனைப்பிரிவுகளையும், நகர் ஊரமைப்புத்துறை மூலம் வரன்முறைப் படுத்தப்பட்டுள்ளது. அரசாணை(நிலை) எண். 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, நாள் 30.10.2021–ன்படி "கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021–2022ன்கீழ் ஸ்ரீமாரியம்மன் நகரில் வடிகால் மற்றும் தார்சாலை அமைப்பதற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு உரிய விதிகளின்படியே ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்றுள்ளன.

சேத்தூர் பேரூராட்சியில் பழுதடைந்த கழிப்பறைகள் பழுதுநீக்கம்/ மராமத்து செய்ய சேத்தூர் பேரூராட்சி மன்ற தீர்மானம் எண். 25, நாள் 29.04.2022–ல் நிறைவேற்றப்பட்டு, மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதியும் பெறப்பட்டு, அனைத்து நடவடிக்கைகளும் மன்றக் கூட்ட அஜண்டா மூலம் அனைத்து உறுப்பினர்களுக்கும் முறையாக சார்பு செய்யப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மனுதாரர் 8வது வார்டு உறுப்பினர் என்ற முறையில் 30.3.2022, 29.04.2022 மற்றும் 26.10.2022 ஆகிய தேதிகளில் நடைபெற்ற மன்றக் கூட்டங்களில் கலந்து கொண்டுள்ளார். தலைவர் உட்பட அனைத்து உறுப்பினர்களாலும் மேற்படி தீர்மானங்கள் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேலும் இது தொடர்பாக மனுதாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநர் அவர்களுக்கு அளித்த 22.08.2022 நாளிட்ட புகாரின் அடிப்படையில் மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோரால் களஆய்வு செய்யப்பட்டு மனுதாரருக்கு உரிய விபரங்கள் எடுத்துரைக்கப்பட்டது. அதன் பின்னர் மனுதாரர் தமது 26.10.2022 நாளிட்ட கடிதத்தில் பொதுக்கழிப்பறைகள் பயன்பாட்டிற்கு தேவையான அளவில் பெரிய கொள்ளளவில் புதிய செப்டிக் டேங்க் அமைக்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் அனைத்தும் நல்ல முறையில் நடைபெற்று வருவதாகவும், தான் தவறுதலாகப் புரிந்து கொண்டு உண்மைநிலை தெரியாமல் தவறுதலாக புகார் கொடுத்துவிட்டேன்." **எனவே தமது புகார் மனு மீது நடவடிக்கைகளைக் கைவிடுமாறு எழுத்துமூலம் கடிதம் கொடுத்துள்ளார். தற்போது இம்முறை மன்றத்தில் அதே கழிப்பறைகள் தொடர்பாக புகார் அளித்துள்ளது ஏற்றுக் கொள்ள இயலாது. இதில் மனுதாரருக்கு ஏதோ உள்னோக்கம் உள்ளது என்றே இம்முறைமன்றம் கருதுகிறது.**

அரசாணை (நிலை) எண்.161, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 14.01.2000–ல் கட்டிட விதிகளுக்கு முரணாக அல்லது அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு, நிபந்தனைகளுக்குட்பட்டு சொத்துவரி விதிப்பு செய்யலாமென ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. அதனடிப்படையிலேயே பேரூராட்சி இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடியே அருணா ரைஸ்மில் வளாகம், ஸ்ரீமாரியம்மன் நகர் மற்றும் அம்மன் நகர் ஆகிய பகுதிகளிலுள்ள வீட்டுமனைகளுக்கு சொத்துவரி விதிக்கப்பட்டு, வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளன.

ஹைமாஸ் விளக்குகள் அமைத்தல் தொடர்பாக உரிய விதிமுறைகளின்படி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் தலைவரின் நிர்வாக அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக புகார் மனுதாரர் பொதுவான புகார்களை அளித்துள்ளார். இதுபோன்ற ஆதாரமற்ற புகார்களை தவிர்க்கவேண்டுமென மனுதாரர் அறிவுறுத்தப்படுகிறார். குடிநீர் குழாய் லீக் மற்றும் ரிப்பேர், மோட்டார் ரிப்பேர் ஆகிய பணிகள் முறையாக பேரூராட்சிப் பணியாளர்களிடம் அறிக்கை பெற்று, அதன் அடிப்படையில் ஒப்பந்ததாரர் மூலம் பழுதுநீக்கம் செய்யப்பட்டு தொகை வழங்கப்படுகிறது. பழுது நீக்கப்பணிகள் மேற்கொண்டமைக்கு GPS MAP camera மூலம் புகைப்படம் எடுக்கப்பட்டு

ஆவணப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் கணினி இயக்குதல் பணிக்கு பேரூராட்சி இயக்குனர் அவர்களின் சுற்றறிக்கையின்படியே ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டு வருகிறது. இதில் முறைகேடு ஏதும் நடைபெறவில்லை என்பதும் தெளிவாகிறது. மனுதாரர் இம்முறை மன்றத்திற்கு புகார் அளிக்கும்போது ஆதாரத்தோடு புகார் அளிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார் பொதுவான புகார் அளிக்கும் பட்சத்தில் இம்முறைமன்றத்தின் நேரம் வீணடிக்கப்படுவதாக இம்முறைமன்றம் கருதுகிறது. எனவே சேத்தூர் தேர்வுநிலைப் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையை ஏற்று, இப்புகார்மனு மீதான நடவடிக்கையினை இத்துடன் முடித்து வைக்கலாமென இம்முறைமன்றம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு, ஜூன் 05–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. செவலூர் பாண்டியன்,
த/பெ. அம்மையப்பன்,
8 A , சின்னஞ்சித்தேவர் தெரு,
சேத்தூர் – 626 121
இராஜபாளையம் வட்டம்,
விருதுநகர் மாவட்டம்

2) செயல் அலுவலர்,
சேத்தூர் தேர்வுநிலை பேரூராட்சி,
விருதுநகர் மாவட்டம்

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை–28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,அலுவலகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை –600028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

உதவிப் பதிவாளர்.